# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.209/2024**

Deposition of Witness of PW5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பழனிசாமி | Calling | : | |
| Father/Husband's Name | : | அய்யாசாமி | Age | : | |
| Village | : | | | : | |
| Taluk | : | | | : | |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 26th August 2025.

எதிரி ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது லக்காபுரத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். தற்போதுஎன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவதாக உள்ள கையெழுத்துஎன்னுடையது தான். கடந்த 27.01.2022 அன்று காலை 8.00 மணியளவில் நான் வீட்டில் இருந்து மணி மேஸ்திரி வீட்டு அருகில் விபத்து நடந்த இடத்திற்கு அருகில் வந்தபோது போலீஸார் விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும், செந்தில் கையெழுத்து செய்தேன். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தியாகராஜன் விபத்து பற்றி தான் போலீஸார் சம்பவ இடத்தில் விசாரித்தார்கள். என்னையும் போலீஸார் விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு வழக்கறிஞர் போதிய வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை சாட்சியம் முடித்து வைக்கப்படுகிறது.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.08.26 17:31:32 +0530

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.209/2024**

Deposition of Witness of PW4

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : லட்சுமி | Calling | : | |
| Father/Husband's Name | : தியாகராஜன் | Age | : | |
| Village | : | | : | |
| Taluk | : | | : | |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 26th August 2025.

எதிரி ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது லக்காபுரம் கிழக்கு வீதியில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன தியாகராஜன் எனது கணவர். கடந்த 26.01.2022 ம் தேதியன்று எனது கணவர் தியாகராஜன் அன்று இரவு 8.00 மணிக்கு லக்காபுரம் மணி மேஸ்திரி வீட்டு அருகே வந்ததாகவும், அவர் மீது டாடா இன்டிகா கார் மோதி விபத்து நடந்ததாகவும் தகவல் கேள்விபட்டு நான் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். எனது கணவர் தியாகராஜனுக்கு தலையிலும், காலிலும் பலத்த காயம் இருந்தது. அன்று இரவு சுமார் 9.15 மணியளவில் எனது கணவர் தியாகராஜன் மருத்துவமனையில் சிகிச்சை பலனளிக்காமல் இறந்துவிட்டார். மொடக்குறிச்சி காவல்ஆய்வாளர் மருத்துவ மனை வந்து எனது கணவர் தியாகராஜன் பிரேதத்தை பார்வையிட்டு விசாரித்த போது நானும் உடன் இருந்தேன். என்னையும் காவல்ஆய்வாளர் விசாரித்தார்.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.08.26 17:31:42 +0530

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தினை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். யாருடைய கவனக்குறைவார் விபத்து ஏற்பட்டது என்று தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.08.26 17:31:51 +0530

## DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.209/2024**

Deposition of Witness of PW3

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | செல்வராஜ் | Calling | : |
| Father/Husband's Name | : | பொன்னப்பகவுண்டர் | Age | : |
| Village | : | | | : |
| Taluk | : | | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 26th August 2025.

எதிரி ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது லக்காபுரத்தில் குடியிருந்து கொண்டு ஆடு, மாடு மேய்த்து விவசாயமும் பார்த்து வருகிறேன். தியாகராஜன் என்பவரை எனக்கு தெரியும். கடந்த 26.01.2022 ல் தியாகராஜன் என்பவர் லக்காபுரம் மணி மேஸ்திரி என்பவர் வீட்டின் முன்பு தெற்கிலிருந்து வடக்கு நோக்கி நடந்து வந்தார். அப்போது இரவு 8.00 மணிக்கும். ஒரு கார் வேகமாக ஈரோட்டிலிருந்து முத்தூர் நோக்கி வந்தது. தியாகராஜன் ரோட்டை கடக்க முயன்றபோது அவர் மீது அடித்து விட்டது. அந்த கார் ஈரோட்டிலிருந்து முத்தூர் செல்லும் ரோட்டில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்தது. அந்த காரின் எண். 5338 ஆகும். அந்த காரை ஓட்டி வந்த நபர் பெயர் சின்னுசாமி அவரை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். (எதிரிதரப்பில் குவிமுச பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது)

2. தியாகராஜனுக்கு தலையிலும், காலிலும் பலத்த அடிபட்டு இருந்தது. 108 ஆம்புலன்ஸ்க்கு மூலம் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். மருத்துவமனையில் தியாகராஜன் இரவு 9.15 மணியளவில்

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.08.26 17:32:00 +0530

இறந்துவிட்டதாக தகவல் தெரிந்து கொண்டேன். போலீஸார் என்னை விசாரித்தார்கள். விபத்து பற்றி தகவல்கள் சொன்னேன்.

**எதிரிதரப்பு வழக்கறிஞர் போதிய வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை சாட்சியம் முடித்து வைக்கப்படுகிறது.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.08.26 17:32:06 +0530

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.209/2024**

Deposition of Witness of PW2

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | வினோத்குமார் | Calling | : |
| Father/Husband's Name | : | லோகநாதன் | Age | : |
| Village | : | | | : |
| Taluk | : | | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 26th August 2025.

எதிரி ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது லக்காபுரத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன தியாகராஜன் என்பவரை தெரியும். கடந்த 26.01.2022 ம் தேதியன்று இரவு சுமார் 8.00 மணியளவில் லக்காபுரம் மாரியம்மன் கோவில் முன்பாக நாதியாகராஜனுக்கு தலையிலும், காலிலும் பலத்த அடிபட்டுஇருந்தது. நான் தான் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்தேன். தியாகராஜன் மகன் பூபதிக்கு நான் தான் போன்மூலம்ன் எனது நண்பருடன் நின்று பேசிக்கொண்டிருந்தேன். அப்போது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வேகமாக வந்தது. அது ஈரோட்டிலிருந்து முத்தூர் போகும் ரோட்டில் வந்தது. தியாகராஜன் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி நடந்து வந்து ரோட்டை கடக்க முயன்றார். அந்த கார் நேராக வந்து அவர் மீது அடித்துவிட்டது. அந்த காரின் பதிவு TN 22 AE 5338 ஆகும். அந்த காரை ஓட்டிவந்த நபரை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். அவர் பெயர் சின்னுசாமி ஆகும். (எதிரிதரப்பில் குவிமுச பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது)

2. மேற்படி விபத்தை நானும், பழனிசாமி, செல்வராஜ் ஆகியோர்கள் நேரில் பார்த்தோம். தியாகராஜனுக்கு தலையிலும், காலிலும் பலத்த அடிபட்டுஇருந்தது.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.08.26 17:32:15 +0530

நான் தான் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்தேன். தியாகராஜன் மகன் பூபதிக்கு நான் தான் போன்மூலம் விபத்து பற்றி தகவல் சொன்னேன். 108 ஆம்புலன்ஸ் மூலம் தியாகராஜனை ஈரோடு அரச மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். பின்னிட்டு மருத்துவமனையில் தியாகராஜன் இறந்துவிட்டதாக தகவல் தெரிந்து கொண்டேன். நான் மருத்துவமனை சென்று இறந்து போன தியாகராஜன் பிரேதத்தை பார்த்தேன். அப்போது மொடக்குறிச்சி காவல் ஆய்வாளர் அங்கு வந்து பிரேதத்தை பார்த்து விசாரித்தார். நான் உடன் இருந்தேன். என்னையும் ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரிதரப்பு வழக்கறிஞர் போதிய வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை சாட்சியம் முடித்து வைக்கப்படுகிறது.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.08.26 17:32:21 +0530

## DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.209/2024**

Deposition of Witness of PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : பூபதி | Calling | : |
| Father/Husband's Name | : தியாகராஜன் | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 26th August 2025.

எதிரி ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது லக்காபுரம் புதுவலசில் குடியிருந்து கொண்டு தனியார் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். விபத்தில்இறந்துபோன தியாகராஜன் எனது அப்பா, சாட்சி லட்சுமி எனது அம்மா.எனது அப்பா தினமும் ஈரோட்டிலிருந்து சித்தோட்டிற்கு வேலைக்கு சென்று வருவது வழக்கம். கடந்த 26.01.2022 ம் தேதியன்று இரவு வினோத் என்பவர் எனக்கு போன்மூலம் எனது அப்பா தியாகராஜனுக்கு விபத்து நடந்ததாக தகவல் சொன்னார். நான் விபத்து நடந்த இடத்திற்கு நேரில் சென்று பார்ப்பதற்குள்ளாக எனது அப்பா தியாகராஜனை ஈரோடு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள். நான் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்று எனது அப்பாவை பார்த்தேன்.

2. நான் பார்க்கும் போது எனது அப்பாவிற்கு தலையிலும், வலது தொடை பகுதியிலும் பலத்த காயம் இருந்தது. நாான் விசாரித்தபோது எனது அப்பா தியாகராஜனுக்கு அன்றைய தினம் 8.30 மணியளவில் புதுவலசு லக்காபுரம் மணி மேஸ்திரி வீட்டிற்கு அருகில் நடந்து வந்தபோது அவர் மீது டாடா இன்டிகா கார் மோதி விபத்து ஏறப்ட்டதாக தெரிந்து கொண்டேன். டாடா இன்டிகா கார் பதிவு எண். TN 22 CE 5338 என்றும், அதனை ஓட்டிவந்தவர் பெயர் சின்னுசாமி

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.08.26 17:32:30 +0530

என்றும் விசாரித்து தெரிந்து கொண்டேன். விபத்து பற்றி நான் போலீஸாரிடம் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது. **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மருத்துவமனையில் சிகிச்சை பலனளிலக்காமல் இறந்து விட்டார். மொடக்குறிச்சி காவல் ஆய்வாளர் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு வந்து இறந்துபோன எனது அப்பா பிரேதத்தை பார்வையிட்டு விசாரிக்கும்போது நானும் உடன் இருந்தேன். என்னையும் காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான், புகாரில் அதிவேகமாக அஜாக்கிரதையாக வாகனத்தை ஓட்டி விபத்து ஏற்பட்டதாக எவ்வாறு குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனது நண்பர் வினோத்குமார் சொல்லி எனக்கு தெரியும். விபத்தில் இறந்து போனவர் எனது தந்தை என்பதால் வாகன விபத்து இழப்பீடு பெறுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.08.26 17:32:35 +0530